**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி**

**அசல் வழக்கு எண்: 273 /2019** பி.வா.சா.1

2025ம் ஆண்டு ஜனவரி திங்கள் 28ம் நாள் செவ்வாய்க்கிழமை வாக்குமூலம் 1857ம் ஆண்டு சட்டப்பிரிவு 10(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்து வைக்கப்பட்டது.

**பெயர் :** பழனிச்சாமி **தந்தை/கணவர் பெயர்:** கருப்பையா

**ஊர் :** **தாலுகா:**

**வயது :** **தொழில்:**

**ஜாதி :** **சமயம்:**

---

**28.01.2025 :** <u>**முதல் விசாரணை:**</u>

நான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவேன். நான் இந்த வழக்கில் பிரதிவாதிகள் தரப்பு 1வது சாட்சி ஆவேன். எனது தரப்பில் நிரூபண உறுதி கூற்றை தாக்கல் செய்கிறேன். அதில் இருப்பது எனது கையொப்பம் தான். நான் சொல்ல சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

1. 26.08.1966ம் தேதியிட்ட அழகு என்பவருக்கு சுக்கிரன் தனக்காகவும், தனது மைனர் மகன் பொன்டைக்கன் தனது கார்டியனாக இருந்து எழுதிகொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.1** ஆகவும்,

2. தாவா சொத்து சம்பந்தமான மனைவரி தோராய பட்டா அசல் **பி.வா.சா.ஆ.2** ஆகவும்,

3. 22.02.2011ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.3** ஆகவும்,

4. 2014-2015, 2015-2016, 2016-2017ம் வருடத்திற்குரிய கதவு எண். 288-ன் வீட்டு வரி ரசீதுகள் எண்ணிக்கை – 3 அசல் **பி.வா.சா.ஆ.4** ஆகவும்,

5. 07.01.2016ம் தேதியிட்ட கதவு எண. 288-ன் மின் கட்டண ரசீதுகள் எண்ணிக்கை 2 **பி.வா.சா.ஆ.5** ஆகவும்,

6. 31.10.2018ம் தேதியிட்ட தாவா சொத்து சம்பந்தமான வில்லங்க சான்று அசல் **பி.வா.சா.ஆ.6** ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.

ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுக்கோளின் பெயரில் ஒத்திவைக்கப்படுகிறது.